# கீழக்கரை நகர்மன்ற 29.11.2019ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

கீழக்கரை இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு 7.5 K.V.A. - U.P.S. பயன்பாட்டில் உள்ளது. இதில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி (மின்கலன்) 5 வருடத்திற்கு மேலாக உள்ளதால் பேட்டரியின் தன்மை இழந்து மோசமான நிலையிலும் மின்சாரம் இல்லாத சமயங்களில் பேட்டரில் சார்ஜ் நிற்காமல் போவதால் கணினி பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே U.P.S. பயன்பாட்டிற்கு 150 MHA பேட்டரி (12V) 12 எண்ணம் வாங்கி பொருத்துவதற்கு இவ்வலுவலக மின்பணியாளர் மற்றும் பொறியாளரால் ஆணையாளர் அவர்களின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 936/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று U.P.S. பயன்பாட்டிற்கு 150 MHA பேட்டரி (12V) 12 எண்ணம் வாங்கி பொருத்துவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. U.P.S. பேட்டரி பொருத்துவதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 652அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :2

கீழக்கரை நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளான சஸ்பென்சர் ஓவர் ஆயில், அப்பர் ஆம்ப், லோயர் ஆம்ப், புஸ் கிட், டியர் ராடு என்ட், ஸ்டேரிங் பால் ஜான்ட், பேக் அன்ட் பிரன்ட் சாக்கப்சர் மற்றும் என்ட் ஜாயின்ட் மற்றும் இதர பழுதுகளை சரி செய்து தருமாறு இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ள பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர் மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 992/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்வதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 653அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :3

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் உள்ள கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனில் உள்ள புட்வால்வு பழுதாகும் போது புதிதாக புட்வால்வு மாற்றி கொடுப்பதற்க புதிதாக புட்வால்வு அசம்ளி வாங்கி தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **1. SP3L Rupper Flap Assembly** | **-** | **1 No.** |
| **2. SP3L Rupper Flap** | **-** | **1 No.** |
| **3. SP4L Rupper Flap Assembly** | **-** | **1 No.** |
| **4. SP4L Rupper Flap** | **-** | **1 No.** |
| **5. SP3L Gland** | **-** | **1 No.** |

(கோப்பு எண். 866 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 654 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :5

01.04.2018–ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்து வரி உயர்வு மற்றும் மண்டல மதிப்பின்படி வரி உயர்வு செய்யப்பட்டதை மறு சீராய்வு செய்திட அரசாணை நிலை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந. IV) நாள்.19.01.2019–ல் அரசு முதன்மை செயலாளர் நிதித்துறை (செலவினம்) அவர்களை உறுப்பினர் / ஒருங்கிணைப்பாளராகவும், இயக்குநர் ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஆணையர் அவர்களை உறுப்பினராகவும் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களை உறுப்பினராக கொண்ட குழு அமைத்து உத்திரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு குழு அமைத்து உத்திரவிடப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் முன் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.150, நாள்.19.01.2019 ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) 01.04.2018–க்கு பின்னர் சொத்துவரி சீராய்வு மூலம் வரி உயர்வு செய்யப்பட்டதை அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், ன்னை அவர்களது சுற்றறிக்கையின்படியும் நிறுத்தி வைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மண்டல மதிப்பின்படி (A, B, C) வரி உயர்வு செய்யப்பட்டதையும் மறு அளவீடு செய்து வரி உயர்வு செய்யப்பட்டதையும் மறு உத்திரவு வரும் வரை நிறுத்தி வைக்கவும், இதன் விவரத்தினை நகராட்சி அலுவலகம் மற்றும் கணினி வசூல் மையம் விளம்பர பலகைகளில் அறிவிக்கை செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 656 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :6

பொதுசுகாதாரம் – கீழக்கரை கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் டெஙகு விழிப்புணர்வு வாராந்திர கணக்கெடுப்பு படிவம் வாஙகி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் 13866 வீடுகள் மற்றும் நிறுவனஙகள் உள்ளது. அப்பகுதிகளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வீடுகள் மற்றும் நிறுவனஙகளில் வாராந்திர கணக்கெடுப்பு படிவம் ஒட்டுவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் டெஙகு காய்ச்சல் பற்றி விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாஙகுவதற்கு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | விழிப்புணர்வு செய்ய வேண்டிய விபரஙகள் |
|---|---|
| 1 | டெஙகு விழிப்புணர்வு வாராந்திர கணக்கெடுப்பு படிவம் ஸ்டிக்கர்<br>(மல்டி கலர் பிரிண்டிங) |

மேற்கண்ட டெஙகு காய்ச்சல் பற்றி விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாஙகுவதற்கு உத்தேச செலவீனம் ரூ 2,20,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. டெஙகு காய்ச்சல் பற்றி விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாஙகுவதற்கான உத்தேச ரூ 2,20,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு விளம்பர ஸ்டிக்கர்கள் அரசு கூட்டுறவு நிறுவனஙகள் மூலம் வாஙகிட உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 657 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :7

கீழக்கரை நகராட்சி, பள்ளமோர்குளம் கிராமம், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடஙகில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) மதிப்பீடு ரூ.340.00 லட்சத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018,–1 நாள்.11.12.2018–ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 22.01.2019–ந்தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி இந்நகர்மன்றத்தில் 18.02.20169–ம் தேதி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற (மதுரை கிளை) வழக்கு WP(MD) No.4372 of 2019 &

WMP(MD) No.3479&3480 of 2019, நாள்.04.03.2019 தீர்ப்புரையின்படி ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு மேற்காணும் பணிக்கு 06.03.2019–ந்தேதி பணி உத்திரவு (Work Order) வழங்கப்பட்டது. பின்பு ஒப்பந்த உடன்படிக்கை (Agreement) செய்து கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை துவங்காமல் காலதாமதம் செய்து வந்ததால். திட்டப்பணியை உரிய காலத்திற்கு முடித்து கொடுக்குமாறு 12.06.2019–ந்தேதி ஒப்பந்ததாரருக்கு முதல் அறிவிப்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 5 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் தொடக்க வேலையை (Jungle Clearance) மற்றும் இடத்தினை சமப்படுத்தும் பணி மட்டுமே ஒப்பந்ததாரர் செய்துள்ள நிலையில் 22.08.2019–ந் தேதி இரண்டவது அறிவிப்பும் அதனை தொடர்ந்து 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் 13.09.2019–ந்தேதி மூன்றாவது இறுதி அறிவிப்பும் செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவர் மேற்காணும் பணியினை உரிய காலத்திற்குள் துவங்காமல் இருந்து கொண்டு இவ்வலுவலகம் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்புகளுக்கு கூறிய பதில் விளக்கத்தினையே வேண்டுமென்றே திரும்ப திரும்ப தெரிவித்து வந்ததால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவின்படி, உடனடியாக பணியினை துவக்கி முடித்துக் கொடுக்குமாறும், தவறும் பட்சத்தில் பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழல் இருக்கின்ற நிலையில் பணி ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்த விதிகளின்படியும், இவ்வலுவலகம் மூலம் 06.03.2019–ம் தேதி வழங்கப்பட்ட பணி உத்திரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்று 30.09.2019–ந் தேதி இறுதியாக அறிவுறுத்தி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு செய்யப்பட்டது. பணி உத்திரவு வழங்கப்பட்டு 7–மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இப்பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பொருட்டு ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் 06.03.2019–ந்தேதி வழங்கப்பட்ட பணி உத்திரவு 09.10.2019–ந்தேதி ரத்து செய்து உத்திரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படியும், ஒப்பந்த விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் இப்பணிக்கு 14.11.2019–ந்தேதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரி (Re-Tender) இவ்வலுவலக கடித ந.க.எண்.1022/2018/இ1 நாள்.14.10.2019–ன்படி அறிவிப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன் அவர்கள் கீழக்கரை நகராட்சி மூலம் வழங்கப்பட்ட பணி உத்திரவு ந.க.எண்.1022/2018/இ1 நாள்.06.03.2019–ந்தேதிய பணி உத்திரவின் காலத்தை நீடிப்பு செய்து (Extent the Period of the Tender) உத்திரவு வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்ற கிளையில் (Writ Petition) எண்:21660/2019, நாள்.14.10.2019–ன்படி தொடரப்பட்ட வழக்கினை மாண்புமிகு நீதியரசர் அவர்களால் மனுவினை 15.10.2019–ம் தேதி தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு இவ்வலுவலகம் மூலம் மறு ஒப்பந்தப்புள்ளி (Re-Tender) கோரிய அறிவிப்பு 15.10.2019–ந்தேதி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. அதனை எதிர்த்து மனுதாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன் அவர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் (Writ Petition)

எண்:22565/2019ன்படி தொடரப்பட்ட வழக்கினை மாண்புமிகு நீதியரசர் அவர்களால் மனுவினை தள்ளுபடி செய்து 24.10.2019–ம் தேதி உத்திரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு (Writ Petition) எண்:22565/2019க்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– வழங்க கோரி திரு.ஏ. கண்ணன் வழக்கறிஞர் அவர்களிடமிருந்து 04.11.2019–ம் தேதி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பட்டியல் தொகை ரூ.15000/–ஐ திரு.ஏ. கண்ணன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் . 658 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :8

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர், முத்துச்சாமிபுரம், அன்பு நகர், கிழக்கு நாடார் தெரு, வள்ளல் சீதக்காதி சாலை மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள வீட்டு கழிவுகள் மற்றும் மழைநீர் வடிகால் மூலம் செல்லும் தண்ணீர் அனைத்தும் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாட்டு கொட்டகை இடத்தில் சேமித்து, அங்கிருந்து மின் மோட்டார்கள் மூலம் கழிவுநீர் ஏற்றப்பட்டு, கடற்கரை பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது. மாட்டு கொட்டகை கழிவுநீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் சேமிப்பு தொட்டிகளிலும், கழிவுநீர் செல்லும் வடிகால்களிலும் மண்கள் (Silt) அதிகமாகியும், கால்வாய் வாய்களில் செல்லும் மழை நீர் அனைத்தும் சாலையில் வழிந்தோடி தேங்குவதால் பொதுமக்களும், அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் அப்பகுதியில் உள்ள சாலையை கடப்பதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே, இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய மாட்டுக் கொட்டகை கழிவு நீரேற்று நிலையத்தில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சேமிப்பு தொட்டிகளில் தேங்கியுள்ள மண்கள் (Silt) அப்புறப்படுத்தவும், கழிவுநீர் மோட்டாரை பழுது நீக்கம் செய்து அவற்றிற்கு புதிதாக செட் அமைக்கவும், கழிவுநீர் மோட்டார் அறை பகுதிகளில் புதிதாக பேவர் பிளாக் அமைக்கவும் மேலும் அப்பகுதியில் உள்ள வடிகால்களை ஆழப்படுத்தி மூடி அமைக்கும் பணி செய்வதற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.4,80,000/– ஐ இந்நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்வதற்கு இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.960/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் பணி செய்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ4,80,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகர் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் . 659 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :9</u>

**கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடம் சுமார் 1976–ல் கட்டப்பட்ட கட்டிடமாகும். இக்கட்டிடத்தின் முன்புறம் உள்ள முகப்பு பகுதியின் மேற்கூரை அடிப்பகுதியானது அவ்வப்போது பெய்யும் மழையின் காரணமாக கசிவு ஏற்பட்டு பழுதடைந்து வருகிறது. மேலும் ஜன்னல் பகுதியில் உள்ள Sunshade அடிப்பகுதியும் சேதமடைந்து வருகிறது. எனவே மேற்காணும் பழுதுகள் அனைத்தையும் சரி செய்யவும், அலுவலக கட்டிடம் முன்புறம் மற்றும் உட்புறங்களில் வர்ணங்கள் பூசும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ரூ.4,50,000/–க்கு இந்நகராட்சி பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.**

**(கோப்பு எண்.976 /2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. **இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ4,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மதிப்பீடு ரூ.4,50,000/–க்குரிய செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>தீர்மானம் . 660 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :11</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 & **2019–20** தூய்மை இந்தியா இயக்கம் (SBM) திட்டத்தில் திருத்திய திட்ட மதிப்பீடு (Revised Project Report) ரூ.**340.00** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.**26888**/UGSS–2/2018–1 நாள்.**11.12.2018**–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். **26888/2018/DO2**, நாள்.**11.12.2018**–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் **22.01.2019**–ந்தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவரின் குறைந்த விலைப்புள்ளி இந்நகர்மன்றத்தில் **18.02.20169**–ம் தேதி ஒப்புதல் பெறப்பட்டு சென்னை உயர்நீதிமன்ற (மதுரை கிளை) வழக்கு WP(MD) No.4372 of 2019 & WMP(MD) No.3479&3480 of 2019, நாள்.**04.03.2019** தீர்ப்புரையின்படி ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு மேற்காணும் பணிக்கு **06.03.2019**–ந்தேதி பணி உத்திரவு (Work Order) வழங்கப்பட்டது. பின்பு ஒப்பந்த உடன்படிக்கை (Agreement) செய்து கொள்ளப்பட்டது. மேற்காணும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு 7–மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பொருட்டு ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம்

**06.03.2019–ந்தேதி** வழங்கப்பட்ட பணி உத்திரவு **09.10.2019–ந்தேதி** ரத்து செய்து உத்திரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படியும், ஒப்பந்த விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் மேற்காணும் பணிகளுக்கு **14.11.2019–ந்தேதி** மின்னணு **ஒப்பந்தப்புள்ளி மறு அறிவிப்பு** (Re Tender) சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனம் மூலம் **15.10.2019–ம்** தேதி ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (South India Edition) மற்றும் தமிழ் தினசரி நாளிதழில் மாநில அளவில் அனைத்து பதிப்புகளிலும் (All Edition in the State) பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.**79,748/–**க்கு பட்டியல் எண்.AAA/0323/19-20 நாள்.18.10.2019–ன்படியானது இந்நகராட்சிக்கு **22.11.2019–ந்** தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பட்டியல் ரூ.**79,748/–**மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1022/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ.**79,748/–**யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் . 662அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**